**In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti**

**Deposition of Witness**

C.C. 137 /2017

PW-3 24-10-2024

| | |
|---|---|
| Name | ஈஸ்வரி |
| Father's/Husband's Name | பாலமுருகன் |
| Village | அய்யாக்கோட்டையூர் |
| Taluk | எட்டயபுரம் |
| Caste | – |
| Calling | பஞ்சாயத்து தலைவர் |
| Religion | – |
| Age | 39 |

(A1 to A4 present. )

**<u>முதல்விசாரணை</u>**

1) நான் அய்யாக்கோட்டையூர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் பஞ்சாயத்து தலைவராக பணி செய்து வருகிறேன். அசா 1 மற்றும் அசா 2 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். 25.04.2017 ம் தேதி மாலை சுமார் 4–4.30 மணியளவில் பன்னீர் செல்வம் குடும்பத்திற்கும் சண்முகத்தாய் குடும்பத்திற்கும் சண்டை நடந்தபோது நான் தெருவில் இருந்தேன். நான் எதற்கு சண்டை போடுகிறீர்கள் என்று விலக்கிவிட்டு சத்தம் போட்டேன்.

2) எதிரிகள் சண்முகத்தாயை கம்பை வைத்து அடித்து அவருடைய சட்டையை கிழித்துவிட்டார்கள். நீ இந்த இடத்தில் பயன்படுத்தி வந்தால் தீயை வைத்து கொழுத்திவிடுவோம் என்று சண்முகத்தாயை சொன்னார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(**கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது** )

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

**(ஒம்),B.பீட்டர்,**

**நீதித்துறை நடுவர் எண்.2,**

**கோவில்பட்டி.**